தருமபுரி–5, அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை:கோ.காவேரி, பி.எஸ்ஸி.,

ந.க.எண். 004330/அ1/2019. நாள்.05.11.2019.

பொருள்: பணியாளர் தொகுதி – தருமபுரி–5,அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி தொகுதி IV – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட போட்டித் தேர்வு 2015–16, 2016–17, 2017–18 தட்டச்சராகப் பணி நியமனம் வழங்கியது – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடித எண்.1717/PSD-A/2019,நாள்.20.02.2019.
2. சென்னை–6, அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் (பணியாளர்) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.023322/இ2–1/2019, நாள்.23.02.2019.
3. தருமபுரி–5, அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.000001/அ1/2019, நாள்.25.02.2019.
4. அரசாணை எண்.130, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள்.22.07.2008.

*****

ஆணை:

பார்வை 1ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடிதங்களின்படி தெரிவு செய்யப்பட்டு, பார்வை 2ல் காணும் அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் (பணியாளர்) அவர்களின் செயல்முறைகளின்படியும் மற்றும் பார்வை 3ல் காணும், தருமபுரி–5, அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரின் செயல்முறைகளின்படியும், தருமபுரி–5, அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் தட்டச்சராகப் பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வரும் கீழேக் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர் பணியினை அன்னாரின் பெயருக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள நாள் முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் தட்டச்சர் பணியிடத்தில் வரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்படுகிறது. அன்னார் தம் மூன்றாண்டு கால தொடர் பணியில் ஈராண்டு கால தகுதிகாண் பருவக் காலத்தை முடிப்பதற்குள் பார்வை 4ல் காணும் அரசாணையின்படி தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் நடத்தப்படும் Computer on Office Automation சான்றிதழ் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் அறிவிக்கப்படுகிறார்.

இந்நியமனம் தற்காலிகமானதெனவும் தொகுதி IV பணி நியமனத்தில் சென்னை / மதுரை உயர்நீதிமன்றம் 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018 நிலுவையில் உள்ள மேல்முறையீட்டு மனுவின் முடிவிற்கு உட்பட்டதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண்<br>(1) | பெயர் மற்றும் பதவி<br>திரு<br>(2) | பணியேற்ற நாள்<br>(3) | பணிவரன் முறை செய்யும் நாள்<br>(4) |
|---|---|---|---|
| 1 | இரா.மோகன்,<br>தட்டச்சர் | 28.02.2019 மு.ப. | 28.02.2019 மு.ப. |

கோ.காவேரி 5/11/19
உதவி இயக்குநர்

பெறுநர்
இரா.மோகன், தட்டச்சர்,
அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம்,
தருமபுரி–5.

நகல்:
1.அலுவலக அ1 பிரிவு.
2.சென்னை–6, அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் (பணியாளர்) அவர்களுக்கு
–தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

CamScanner